

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , வார்டு168க்குட்பட்ட கிண்டி, லேபர் காலனி, லயன்ஸ் கிளப் தொடக்கப்பள்ளியில் நேற்று (04.09.2025) நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கான தீர்வுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மண்டலக்குழுத் தலைவர்கள் ஆர்.துரைராஜ், எம். கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார், வட்டச் செயலாளர் ராதாகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை ஒப்படைத்த

# தூய்மைப் பணியாளர் கிளாராவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, செப். 5-

தூய்மைப் பணியாளர் சகோதரி கிளாரா அவர்களின் நேர்மையை பாராட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு

**தூய்மைப் பணியின்போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை நேர்மையோடு காவல்துறையிடம் சகோதரி கிளாரா அவர்கள் ஒப்படைத்த செய்தியைப் பார்த்து நெகிழ்ந்தேன்.**

**எளியவர்கள் எப்போதும் நேர்மையின் பக்கம்தான் என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாக மின்னிடும் தங்கை கிளாராவுக்கு எனது அன்பும் பாராட்டுகளும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# துப்புரவுப் பணியாளர் கிளாராவுக்குப் பாராட்டு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெகுமதி வழங்கி சிறப்பித்தார்!

சென்னை, செப். 5-

தூய்மை பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களுக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புத்தாடை மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

சென்னை ராயபுரம், காசி மேடு பகுதியைச் சேர்ந்த பெயிண்டராக பணியாற்றி வரும் திரு.ராமச்சந்திரன் என்பவரின் மனைவி திருமதி கிளாரா (வயது 39) அவர்கள், திருவான்மியூர் பகுதி 180 வது வார்டில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வருகின்றார். இந்த தம்பதியினருக்கு செல்வி ரா.சூசை மேரி (வயது 18), செல்வி ரா. சுவாதி (வயது 13), செல்வி ரா.நிக்கிதாஸ்ரீ (வயது 10) என்ற 3 பெண் குழந்தைகள் உள்ளனர்.

துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான, மருந்தீஸ்வரர் திருமண மண்டபத்தில் தூய்மை பணியில் ஈடுபட்ட போது கீழே கிடந்த 1 பவுன் தங்கச் சங்கிலியை கண்டெடுத்து, நேற்று காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இந்த செய்தியை அறிந்து துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களை குடும்பத்துடன் தனது முகாம் அலுவலகத்திற்கு அழைத்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் . உதயநிதி ஸ்டாலின் அவர்கள், துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களின் நேர்மையை பாராட்டினார். மேலும் புத்தாடையும், தி.மு.க இளைஞரணி அறக்கட்டளையின் சார்பில் வெகுமதியும் வழங்கி அவரது நேர்மையான பணிக்கு வாழ்த்து தெரிவித்தார்.

துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களின் குடும்பத்தினருடன் உரையாடிய தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், லண்டனில் இருந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தன்னை அழைத்து, பாராட்டு தெரிவிக்குமாறு தொலைபேசியில் தெரிவித்தார் என்றும், தமிழ்நாடு திரும்பியதும், உங்களை நேரில்சந்திக்க ஆர்வமாக இருப்பதாகவும், கிளாரா குடும்பத்தினரிடம் தெரிவித்தார்.



தி.மு.கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன், காஞ்சிபுரம் மாநகராட்சி, 9 மற்றும் 15வது வட்ட பொதுமக்களுக்கான "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் காஞ்சிபுரம், அண்ணா அரங்கத்தில் நடைபெற்று வருகிறது. காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் முகாமில் பங்கேற்று, ஆய்வு செய்து, பொதுமக்களிடம் உரையாடி, தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு ஆணைகளை வழங்கினார். உடன், மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், 1வது பகுதிக் கழக செயலாளர் கே. திலகர், மாநகராட்சி ஆணையாளர் பாலகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

## முதல்வர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்

# இதுவரை 3600 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேர்பாபு தகவல்!

சென்னை, செப். 5 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு நேற்று (4.9.2025) சென்னை, சூளை, அருள்மிகு அங்காளபரமேஸ்வரி மற்றும் காசி விசுவநாதர் சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற திருக்குட முழுக்கு நன்னீராட்டு பெருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது,

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத்துறை ஆகம விதிப்படி குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவடைந்த திருக்கோயில் களை கண்டறிந்து திருப்பணிகளை மேற்கொண்டு தொடர்ந்து குடமுழுக்கு நடத்தி வருகின்றது. அந்த வகையில் இன்றைய தினம் நடைபெற்ற 95 திருக்கோ யில்களின் குடமுழுக்கை யும் சேர்த்து 3,600 திருக்கோயில்களுக்கு இதுவரை குடமுழுக்கு நடந்தேறியுள்ளது.

சென்னையில் சூளை அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், புரசை வாக்கம் வேத விநாயகர் திருக்கோயில், பேரக்ஸ் ரோடு ஆஞ்சநேயர் திருக்கோயில், தங்க சாலை கமல விநாயகர் திருக்கோ யில், அயனாவரம் பவானி அம்மன் திருக்கோயில், அண்ணா நகர் அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், விருகம்பா க்கம் மகாகாளியம்மன் திருக்கோயில், மயிலாப்பூர் அருள்மிகு சித்தேரி விநாயகர் திருக்கோயில் என 8 திருக்கோ யில்களுக்கு நேற்று வெகு விமரிசையாக குடமுழுக்கு நடைபெற்றுள்ளது.



சூளை அங்காள பரமேஸ்வரி மற்றும் காசி விசுவநாதர் திருக்கோயில் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயிலா கும். இத்திருக் கோயிலுக்கு 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இறுதியாக குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. தற்போது ரூ.28.56 லட்சத்தில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. திருக்கோயிலின் விமானம் மற்றும் கொடிமரமானது 1,310 கிலோ செப்பு தகட்டில் நகாசு வேலைகள் செய்யப்பட்டு, அதன் மீது 874 கிராம் தங்கத்தை கொண்டு தங்க மூலாம் பூசப்பட்டு ள்ளது. இப்படி திருக்கோயில்களில் திருப்பணிகள், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் மீட்டெடுப்பு, புதிய தேர்கள் உருவாக்கம் மற்றும் மராமத்து பணிகள், கட்டணமில்லா ஆன்மிகப் பயணங்கள் என ஆன்மிகப் பெரியோர்கள் மற்றும் இறை அன்பர்கள் போற்றும் வகையில் திராவிட மாடல் அரசு ஆன்மிக அரசாக திகழ்ந்து வருகிறது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஐ. முல்லை, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே. எஸ். ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர் சொ.வேலு, உதவி ஆணையர் க.சிவகுமார், திருக்கோயில் செயல் அலுவலர் பி. சண்முகம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 197 வது நாள்!

## அம்பத்தூர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!





சென்னை,செப்.5-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 197 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (04.09.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 88 பாடி குமரன் நகர், மகாத்மா காந்தி ரோடு, பிள்ளையார் கோவில் அருகில். 2) வட்டம் 87 பஜனை கோயில் தெரு, பாடி, சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து. ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/வடக்கு/ கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு. மோகன்குமார், மு. விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**

**மண்டலம்-5**

ம. அ. 5. ந. க. எண்.இ1/RPM/597890/2025

**மின்னணு ஒப்பந்தம் அறிவிப்பு**

மண்டலம் - 5, பகுதி - 14 கோட்டம் - 59 ல் **Proposed construction of new building (GF for Ration shop and FF for Multipurpose hall) at Issac street** பணிக்கு மேற்பார்வைபொறியாளர் (வடக்கு) அவர்களால் ஒப்பந்தம் வரவேற்கப்படுகின்றன.

**பணிக்கான மதிப்பு ரூ.58,71,000/- ஆகும்.**

ஒப்பந்ததாரர்கள் **https://tntenders.gov.in** இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின்னணு ஒப்பந்தத்தில் நாள் : **11.09.2025** பிற்பகல் **3.00** மணிக்குள் பங்கேற்கலாம். **12.09.2025** அன்று பிற்பகல் **3.30** மணிக்குள் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ/4913/ஒப்பந்தப்புள்ளி/ 2025 — **மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)**




தலைமை கழகத்தில் மாநில தொழிலாளர் அணி ஆலோசனை கூட்டம் மாநில தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி.ஜி செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. வருகின்ற 12.9.25 நடைபெற உள்ள தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர் கூட்டம் நடைபெற உள்ளதால் தீர்மானங்கள் நிறைவேற்றி ஆலோசனை செய்தனர். இதில் மாநில தொழிலாளர் அணி துணை செயலாளர்கள் ராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ராஜேந்திரன், முனைவர் ஆர். வரதன், மு.ராஜகாந்தம், கோவை LPF நா.தமிழ்ச்செல்வன், ராமேஸ்வரம் பாஸ்கர் மற்றும் சென்னை மேற்கு மாவட்ட அமைப்பாளர் எம்.டி.ஆர். சாரதி மணிமாறன் கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 13, வார்டு 173ல், எதிர்வரும் பருவமழையை ஒட்டி, CMRL திட்டம் நடைபெறும் பகுதியில் மழைநீர் வடிகால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டு முறையாக உள்ளனவா என்று நேற்று 04.09.2025 காலை 13வது மண்டல வார்டுக்குழு தலைவர் இரா. துரைராஜ் 173வது வார்டு மாமன்ற உறுப்பினர் சுபாஷினி மற்றும் மாநகராட்சி மண்டல அலுவலர், குடிநீர்வாரிய EE உள்ளிட்ட அதிகாரிகளுடன் மேற்பார்வையிட்டு தேவையான ஆலோசனைகள் வழங்கினார்.


"நாட்டுத் தொண்டும் - மொழித் தொண்டும் தனது இரு கண்கள் என வாழ்ந்திட்ட "கப்பலோட்டிய தமிழர்" வ.உ.சிதம்பரனாரின் தியாக வாழ்வை, இளைஞர்களுக்குப் பயிற்றுவித்து அவரது பெருமையைப் போற்றுவோம்."

**- மு.க.ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்



**கப்பலோட்டிய தமிழன்**

**வ.உ.சிதம்பரனார் அவர்களின்**

**154ஆவது பிறந்த நாள்**

தமிழ்நாடு அரசின் சார்பில்

**கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார்** அவர்களின் திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**

மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**நாள் : 5.9.2025, வெள்ளிக்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

**இடம் : காந்தி மண்டப வளாகம், கிண்டி, சென்னை**

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in **இயக்குநர்,** செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.

செ.ம.தொ.இ/1027/வரைகலை/2025